1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்ள்வி கேட்டவருக்கு இரண்டாவது சந்தர்ப்பம். ஆகவே, திரு. பெ.சு, திருவேங்கடம்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, 14 ஊராட்சி ஒன்றியங்கள், நகரங்களுக்குத் தூரமாக இருந்ததாலே மேல் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கிற கருத்து இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த 14 ஊராட்சி எவை, எவை என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த 14 ஒன்றியங்களின் பெயர்களாவன : பூண்டி, சிததாமூர், கீரப்பாளையம், கம்மாபுரம், திருநாவலூர், வல்லம், வானூர், கொள்ளிடம், சேதுபாவா சத்திரம், கடவூர், விராலிமலை, குஜிலியாம்பாறை, நரிக்குடி, கன்னன்குடி.

*வினா எண். 143—திரு. ஏ. ராமலிங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் பள்ளிகளில் உயர் செகண்டரி வகுப்புகள் தொடங்க அரசுக்கு உத்தேசம உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ராமலிங்கம் : அனுமதி வழங்கப்பட்டமைக்கு மிக்க நன்றி. இருப்பினும் சையன்ஸ் லேபரட்டரி கட்டிட வசதி இல்லை. ஆகவே, கட்டிட வசதியும் சையன்ஸ் லேபரட்டரியும் கொண்டு வர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

*வினா எண். 144—திரு. கே.ஜே. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், களம்பூரில் Higher Secondary பள்ளி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?